**Tamilmanam International Research Journal of Tamil Studies**
*An international, peer-reviewed monthly academic research journal*
ISSN: 3049-0723 (Online)
3107-7781 (Print)

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 (2024-) Multidisciplinary
: https://doi.org/10.63300/tm12042026

**Vol. 12 No. 04 (2026): September 2026**, **p61-70** | Available online at: www.tamilmanam.in

*Original Research Paper – Peer reviewed* ✓

# திருவள்ளுவர் காவியத்தில் கல்விச் சிந்தனைகள்

Thoughts on Education in Thiruvalluvar Kaaviyam

**டாக்டர். வே.விக்னேசு,**
தமிழ் உதவிப்பேராசிரியர்,
பி.எஸ்.ஜி. கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 641014..

**Dr. V.Vignesh*,**
*Assistant Professor of Tamil,*
*PSG College Of Arts and Science, Coimbatore-641014.*
*Email: vignesh@psgcas.ac.in, Tel:9597203214*

***Article history***
Received: 20-08-2026
Revised: 30-08-2026
Accepted: **25-08-2026**
Published on: 01-09-2026

*Corresponding Author
Email: *vignesh@psgcas.ac.in*

**Abstract:** Tiruvaḷḷuvar kāviyam is a unique Tamil poem of the twentieth century. It was composed by Coimbatore scholar A. Krishnasamy Naidu. The author's fictional kāviyam Thandiyalangaram also contains elements of kāviyam. In such a society, there should be separate educational institutions for men and women. Academic learning alone is insufficient; students must also acquire proficiency in various arts. Thiruvalluvar's epic embodies the vision that both genders should excel by engaging in diverse forms of training—such as agriculture, vocational skills, physical exercise, *asanas* (yoga postures), martial arts, spinning, and arithmetic. The objective of this article is to highlight these educational ideals.

**Keywords:** *Thiruvalluvar, Epic, Non-violence, Gandhi, Socialism, Education, Educational institutions.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**ஆய்வுச்சுருக்கம் :**

இருபதாம் நூற்றாண்டு கண்ட தனித்தமிழ்க்காப்பியம் திருவள்ளுவர் காவியம். இதனை இயற்றியவர் கோயம்புத்தூர் பண்டிதர் அ. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள். ஆசிரியரின் கற்பனைக்காவியமான இதன்கண் தண்டியலங்காரம் நவிலும் காப்பிய உறுப்புக்கள் பொருந்தியுள. சுயராஜ்யம், மக்களாட்சி, காந்தியின் அகிம்சை, நேருவின் சமதருமம் ஆகியவற்றில் ஆசிரியருக்கு ஆழமான ஈடுபாடு உண்டு. நேருவின் சமதருமத்தில் ஆசிரியருக்கிருந்த அளவிலா ஆர்வத்தினால் சாதி, சமயமற்ற சமதருமச் சமுதாயத்தை இக்காவியத்தில் படைத்துக்காட்டியதுடன் அச்சமுதாயத்தில் ஆண், பெண் இருபாலருக்கும் தனித்தனிக் கல்விச்சாலைகள் இருக்க வேண்டும். ஏட்டுக்கல்வி மட்டும் போதுமானதல்ல; பலவிதமான கலைகளையும் மாணவர்கள் உடன் பயில வேண்டும். உழவுத்தொழில், முதல் தொழிற்கல்வி, உடற்பயிற்சி, ஆசனப் பயிற்சி, படைக்கலப் பயிற்சி, நூல் நூற்றல், புள்ளோட்டல் போன்ற பல்வேறு பயிற்சிகளையும் இருபாலரும் மேற்கொண்டு மேன்மையுற வேண்டும் என்றின்ன கல்வி குறித்த சிந்தனைகள் திருவள்ளுவர் காவியத்தில் காணலாகின்றன. அவற்றை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கமாம்.

**திறவுச் சொற்கள் :** திருவள்ளுவர், காப்பியம், அகிம்சை, காந்தி, சமதருமம், கல்வி, கல்விச்சாலைகள்.

**தோற்றுவாய் :**

அ.கி.நாயுடு என்று தனியன்போடும் பெருமதிப்போடும் தமிழ்கூறும் நல்லுலகால் அழைக்கப்பெறும் கோயம்புத்தூர் பண்டிதர் அ. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள், திருவள்ளுவரைத் தலைவராகக் கொண்டு திருவள்ளுவர் காவியம் இயற்றியவர். தமிழர் சமுதாயம், எல்லாச் சமுதாய அமைப்புகளுக்கும் முன்னையது; தனிச்சிறப்புடையது என்பதைத் தொல்காப்பியர் கண்ட தமிழர் சமுதாயம் என்னும் ஆராய்ச்சிப் பெருநூல் வழி நிறுவியவர். கவிச்சக்கரவர்த்தி கம்பர் வரலாறு, கம்மவாரும் தென்னாடும், நால்வகைப் பாவும் பாவைநோன்பு வரலாறும், திருபகவன் கீதை உண்மைப்பொருள், பூளைமேடு வரலாறு என்னும் நூல்களைப் படைத்தவர். இரதபந்தம் இயற்றுவதில் வல்லவர். உள்ளம் நினைப்பதை வெண்பாவால் வெளியிடும் ஆற்றல் பெற்றவர். இத்தகு சான்றோர் அரிதின்முயன்று இயற்றிய திருவள்ளுவர் காவியத்தில் வெளிப்படும் கல்வி குறித்த சிந்தனைகளை எடுத்தியம்புவதே இக்கட்டுரையின் நோக்கம்.

**திருவள்ளுவர் காவியம் :**

அல்லன மறுத்து நல்லன ஏற்றுத் தெளிந்த உண்மைகளை எழுதும் திறனும் உரனும் பெற்றிருந்த அ.கி. நாயுடு அவர்கள், 1940-ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்தே ‘காப்பியம்’ இயற்ற வேண்டுமென்ற வேணவா இருந்து வந்தது. இவ் அவாவின் மேலீட்டால் உலகச் சான்றோர் திருவள்ளுவரைத் தலைவராகக் கொண்டு அரும்பெருங் காப்பியமொன்று இயற்றலானார்.

பதினெட்டாண்டுகள் அரும்பாடுபட்டு கப்பியத்தை இயற்றி முடித்து, 1958-ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் பீளமேட்டில் அரங்கேற்றினார். இங்ஙனம் அரிதின்முயன்று இயற்றிய காப்பியமே 'திருவள்ளுவர் காவியம்' என்னும் பெயரினதாம்.

**காவிய அமைப்பு :**

திருவள்ளுவரைக் காப்பியத் தலைவராகக் கொண்டு இயற்றப்பட்ட திருவள்ளுவர் காவியம் 5 காண்டங்களையும் 104 படலங்களையும் 4030 வெண்பாக்களையும் கொண்டது. காவியத்தொடக்கத்தில் 23 பாயிரச் செய்யுட்களையும் கொண்டது. கல்விக்காண்டம் 12 படலங்களையும் 215 செய்யுட்களையும்; யாத்திரைக்காண்டம் 84 படலங்களையும் 751 செய்யுட்களையும்; முப்பால்காண்டம் 18 படலங்களையும் 518 செய்யுட்களையும்; உரிமைக்காண்டம் 26 படலங்களையும் 988 செய்யுட்களையும்; அமைதிக்காண்டம் 25 படலங்களையும் 1449 செய்யுட்களையும் கொண்டுள்ளன.

இக்காவியத்திலுள்ள பாக்களனைத்தும் வெண்பாக்களால் இயன்றதாகும். வேண்டுழியெல்லாம் திருக்குறளைப் பொருத்திக் காட்டுதற் பொருட்டே வெண்பாக்களான் இக்காவியம் இயற்றியதை,

**"பாவினத்தால் பாட்டியற்றும் பண்பிருந்தும் பாடரிய**
**தேவினித்த வெண்பாவில் செய்தனன் நூல் – காவியத்தில்**
**முப்பால் முழுக்குறளை அங்ஙனே வைத்தற்காம்**
**அப்பால் கருத்தமைதி ஆய்த்து"**

- (திருவள்ளுவர் காவியம். பாயிரம். பா.22)

என்னும் பாயிரச்செய்யுளான் இந்நூலாசிரியர் இயம்புகின்றார்.

**கற்றவரே கண்ணுடையார்:**

பண்டைய தமிழ்ச்சமுதாயத்தில் மரத்தடியும் ஆசிரியர் இல்லமும் ஊர் அம்பலமும் பள்ளிகளாக விளங்கின. சங்கநாளில் ஏறத்தாழ ஐந்நூறு புலவர்கள் வாழ்ந்துள்ளனர். இவர்களில் அரசர்களும் பெண்களும் பலர். கல்வி என்பது குல, குடி வேறுபாட்டைக் களையக்கூடிய கருவி என்று அவர்கள் கருதினர். பாண்டியன் நெடுஞ்செழியன் கல்வியை வலியுறுத்திப் பாடிய செய்யுள் புறநானூற்றில் அமைந்துள்ளது. ஆசிரியர் உற்றவிடத்தில் உதவியும் மிக்க பொருள் கொடுத்தும் பின்னிற்றலை முனியாமலும் கற்றல் வேண்டும் என்றும் அங்ஙனம் கற்றவனைத் தாய் பிறரினும் விரும்புவாள் என்றும் அறிவுடையோன் வழியில் அரசும் செல்லும் என்றும் வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும் கீழ்ப்பால் ஒருவன் கற்பின் மேற்பாலொருவனும் அவன் கண்படுவான் என்றும் அந்த மன்னன் குறிப்பிட்டுள்ளான். கற்றவனுக்கு நாடு, இனம், மொழி ஆகிய எல்லைகளைக் கடந்து புகழ் நிற்கும். அதனால் அனைவரும் கல்வியைக் கற்க வேண்டும் என்பதனை,

**"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்**

| Copyright © Author(s)

**சாந்துணையும் கல்லாத வாறு.”** (குறள்-397)

என்றனர் வள்ளுவனார்.

**வள்ளுவனாரின் கல்வி:**

திருவள்ளுவர் காவியத்தில் முதற்காண்டமாகிய கல்விக்காண்டத்தில் வள்ளுவனாரின் கல்வி பற்றிக் கூறப்படுகின்றது. வள்ளுவனாரின் இளமைக்கல்வி குருகுலக் கல்வியாகவே இருந்தது. அறிவை இரத்தல் அறம் என்று கூறும் ஆசிரியர்,

**"அறிவை இரத்தல் அறமாமென் றெண்ணச்**
**செறிவுநிறை செந்தமிழன் தேர்ந்தான்; - நிறைய**
**உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்**
**கடையரே கல்லா தவர்."**

- (திருவள்ளுவர் காவியம்.1;3:5,6)

**"இரக்கு மறிவுக்கும் ஏற்றகைம் மாறாய்ப்**
**பரக்கவொன் றாற்றாலெனும் பண்பன- இரக்கமுற**
**ஆசானுக் காக அருளும் சிறுபணிகள்**
**கூசாமல் செய்வான் குறித்து."**

- (தி. கா.1;3:5,7)

என்பதனான் வள்ளுவனார் இரக்கும் அறிவிற்குக் கைமாறாய் ஆசானுக்கு சிறு சிறு பணிகள் செய்து வந்ததாகவும் கூறுகின்றார். இம்முறையில் இருபத்தைந்து ஆண்டுகள் பயின்ற பின்னர் மதுரையில் மேற்கல்வி பயில என்னை விட்டு செல்கின்றார் வள்ளுவனார்.

**கல்வியின் மேன்மை:**

திருவள்ளுவர் காவியத்தில் மதுரைக்குச் செல்லும் வழியில் மலையின மக்களின் பொதுவாழ்வை வள்ளுவர் காண்கிறார். அச்சமயத்தில் கல்வியறிவின் இன்றியமையாமையை வள்ளுவரின் வாயிலாக ஆசிரியர் வலியுறுத்துகிறார்.

**”கல்லா மலையலகர் கண்ட பொதுவுடைமை**
**நில்லாத் தனியுடைமை நெஞ்சுகொளின் - ஒல்லாதாம்;**
**கல்லாதான் ஒட்பம் கழீஇயநன் றாயினும்**
**கொள்ளார் அறிவுடை யார்.**”

- (தி. கா.1;5;35)

எனக்கூறுமாற்றான், ஒருவன் எத்துணை நற்பண்புகள் பெற்றிருந்தபோதிலும் கல்வியறிவு மட்டும் இல்லாவிடின், அதனால் விளையும் நல்விளைவுகளை அடைய முடியாது எனக் கல்வியின் மேன்மையை ஆசிரியர் விளக்குகிறார்.

**படிப்பும் அறிவும்:**

திருவள்ளுவர் காவியத்தில் வள்ளுவர் காணும் மலையர் கல்வியறிவற்றவராக இருந்தும் பொதுவாழ்வு வாழ்கின்றனர். அவர்களுக்குப் பொதுவுடமை என்றோ தனியுடைமை என்றோ

பகுத்தறியத் தெரியாது. சேர்ந்து உழைத்துத் திரட்டும் விளைபொருளைப் பகுத்துண்பர். சூது, ஏய்ப்பு, விலைமாதர், வாது, சுரண்டல், சுரண்டப்படுதல் ஆகிய ஒன்றும் அறியார். ஆனால் படிப்பறியார். இதனை,

**"படித்தவ ரல்லர்; படிந்தவ ராவர்;**
**வடித்த ஒழுக்கத்தின் மாணபர்; -துடைத்துளம்**
**காமம் கவறாடல் கள்ளுண்டல் பொய்ம்மொழிதல்**
**நாமம் அறிந்திலர் நாள்."**

- (தி. கா.1;5;16)

**"அழுக்க றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்**
**இழக்கா இயன்ற அறத்தின்- ஒழுக்கத்தை**
**உள்ளி அவரவர் ஒண்மனையில் கற்றுள்ளார்;**
**பள்ளிப் படிப்பினா லன்று."**

- (தி. கா. 1;5;17)

**"வாழ்விற்கு வேண்டும் வளம்பட்ட பேச்சல்லால்**
**பேழ்வில் கலையறிவுப் பேச்சறியார்;- சூழ்வெண்**
**எழுத்தறியா ராயினும் ஏன்றபொதுப் பண்ணை**
**முழுத்தறிவார் செய்தல் முனைந்து."**

- (தி. கா. 1;5;18)

**"சூதறியார்; ஏய்ப்பறியார்; சொல்லுவிலை மாதறியார்;**
**வாதறியார்; செல்வ வழக்கறியார்;- கோதறியார்;**
**தோதுச் சுரண்டல் சுரண்டப் படலறியார்;**
**ஏதுபடிப் பொன்றும் இலர்."**

- (தி. கா. 1;5;19)

என்று மலையர் தம் கல்வியறிவின்மை பற்றிக் கூறுகின்றார்.

**வள்ளுவர் மலையரைப் படிக்கச் செய்தல்:**

பொதுப்பண்ணை ஆய்ந்து வளரச் செய்யத்தக்க கலைஞானம் தந்தால் மலையர் வாழ்வு உயரும். அன்றியும், சூதுமிக்க வணிகர், மலையறை மயக்கப் பொருள் கொடுத்து ஏய்த்திடுவார். அவர்களுடைய செல்வத்தை வஞ்சகத்தால் பறித்துத் தேவைக்கு மேல் பதுக்குவர். இந்தநிலை தவிர்க்க மலையருக்குக் கல்வியறிவு வேண்டும் என்று கல்வியின் இன்றையமையாமையை ஆசிரியர் கூறுகின்றார். அதனைக் கேண்மின்:

**"பண்வணிகர் பார்த்து மயக்கப் பொருள்கொடுத்து**
**எண்மலை மக்களை ஏய்த்திடுவர்; - நண்மனையில்**

**தேவைக்கு மேல்தேவை தேடிப் பதுக்குவிக்க**
**நாவைச் சுவைப்பிப்பர் நன்கு."**

- (தி. கா. 1;5;38)

**"ஆன்ற பொதுப்பண்ணை ஆய்ந்து வளரச்செய்**
**சான்ற கலைஞானம் தந்திட்டால் - ஏன்ற**
**மலையுலகர் வானுலக வாழ்வில் மகிழ்ந்திடுவர்;**
**நிலையுலகில் காட்டாவர் நின்று."**

- (தி. கா. 1;5;40)

திருவள்ளுவர் காவியத்தில் வள்ளுவனார் மதுரைக்குச் சென்று கல்வி கற்றதைக் கூறுங்கால் ஆசிரியர் பண்டிதர் அ.கி. நாயுடு அவர்கள் கல்விமுறை, தொழிற்கல்வி, கல்விச்சாலைகள் இன்றின்னவற்றைப் பற்றி விரிவாகப் பேசுகின்றார்.

**கல்விமுறை:**

ஆண்களைப் போலவே பெண்களுக்கும் கலையறிவும் கல்வியறிவும் வேண்டும். ஆண், பெண் இருபாலரின் வாழ்க்கைக்கு வேண்டிய கலைநூல்கள் கற்றுத் தரப்பட வேண்டும். அவரவர் மனத்தின் இயல்பிற்கேற்ப ஆண், பெண் இருபாலருக்கும் தனித்தனிக் கல்விச்சாலைகள் வேண்டும் என்பதனை,

**"மக்களிரு பாலார்தம் வாழ்க்கைக்கு வேண்டுவன**
**ஒக்க தனிக்கலைநூல் ஓதியும்- மிக்கறிவு**
**மிஞ்சு பொதுக்கலையும் வேண்டினார்; மாதர்க்கும்**
**மஞ்சர்க்கும் ஒன்றே மனம்."**

- (தி. கா.1;10;21)

எனக்கூறுவதனான் வலியுறுத்துகிறார்.

**தொழிற்கல்வி:**

மாணாக்கர்கள் ஏட்டுக்கல்வியுடன் மட்டும் நில்லாது வரை, உழவு, விச்சை, தொழில், வாணிகம், சிற்பம் ஆகிய அறுவகைத் தொழிற்கல்வியும் பற்றி அறிதல் வேண்டும் என்பதனை,

**"வரை, வுழவு, விச்சை, தொழில், வாணிகம், சிற்பம்**
**உரைசெயுமிவ் வாறும் உலகில் -பரைசுமித்**
**துய்ய தொழில்செய் தறுதொழிலோர் யாவரெனும்**
**அய்யம் அறுத்தார் அவர்."**

- (தி. கா.1;10;9)

என்னும் பாடலால் விளக்குகிறார்.

**உடற்பயிற்சியின் இன்றியமையாமை:**

உடல்நலம் நன்கு இருந்தால்தான் கற்கும் கல்வி உள்ளத்தில் நிற்கும். எனவே உடல்நலத்திற்காக உடற்பயிற்சி, ஆசனப்பயிற்சிகளின் முக்கியத்துவத்தை,

**"பல்லா சனங்கள் பரம்பொருளைக் காணவல**
**சொல்லா உடல்நோய் தொலைதற்காம் - ஒல்லுமுடல்**
**நோயின் றிருந்தால் நுவலும் பரம்பொருள்**
**ஒயின்றித் தங்கும் உளம்."**

- (தி. கா.1;10;15)

என்னும் பாடல் வழி நுவல்கிறார்.

**"உண்மையான அறிவு வளர்ச்சி பெறுவதற்குப் பயனுள்ள உடலுழைப்பை மேற்கொள்ள வேண்டும்"** (எ.மே. டாக்டர் ந. சாந்தா ஆப்தே; ப.198) என்ற அண்ணல் காந்தியடிகளின் கருத்தும் ஈண்டு எண்ணத்தக்கது.

**இளமைக்கல்வி:**

பண்டிதர் அ.கி. நாயுடு அவர்கள் திருவள்ளுவர் காவியத்தில் அமைத்துக் காட்டியுள்ள சமதருமச் சமுதாயத்தில் கல்விமுறை எங்ஙனம் இருந்தது என்பது குறித்து விரிவாகப் பேசுகிறார். அவ்வகையில்,

**"வீட்டினில் தாயிடம் வீண்பொழுது போக்காமல்**
**பாட்டியல் காதை பலபயில்வர்;- காட்டில்**
**தகப்பனுடன் வேலை தகுவனசெய் யுங்கால்**
**மிகப்பல கற்குவர் மேல்."**

- (தி. கா.5;14;80)

என்னும் பாடல்வழி, இளமையில் இல்லத்தில் தாயிடம் கதைகள் பல பயிலவேண்டும். காட்டில் வேலை செய்யுங்கால் தந்தையிடம் பயில வேண்டும் என்பதான், இளமையில் பெற்றோரடத்துக் கற்கும் கல்விமுறை ஆசிரியரான் வலியுறுத்தப்படுகிறது.

**பல்கலை வல்லுனர்:**

திருவள்ளுவர் காவியத்தில் ஆசிரியர் அமைத்துள்ள சமதருமச் சமுதாயத்தில் அமைதியுடன் வாழ வழிகூறும் கல்வியைக் கற்பிக்கும் பள்ளிகள் இருந்தன. அன்றியும், ஒவ்வொரு கலையிலும் தேர்ந்த கலையாளர் ஒவ்வோரிடத்து இருப்பர். அவர்கள்பால் சென்று கலைபயில்வர். கைமாறாக உழைத்திடுவர் என்பதனை,

**"பெருமைப் பதிவித்தி யாலயம் பேணும்**
**அருமையுறு பள்ளிகள்போல் அன்பாய்- வருமமைதி**
**கூட்டு மடிப்படையில் வாழவழி கூறுபடிப்**
**பூட்டுபல பள்ளிகளங் குண்டு."**

- (தி. கா. 5;14;81)

**"ஒவ்வொர் கலையில் உறைந்த கலையாளர்**

**ஒவ்வொர் மனையில் உறைகுவர்; - அவ்வவர்பால்**

**சென்று கலைபயில்வர்; தேர்ந்தகைம் மாறாக**

**ஒன்ற உழைத்திடுவ ரோர்ந்து"**

- (தி. கா. 5;14;82)

என்னும் கதைகள் வாயிலாகப் புலப்படுத்துவர்.

**அமைதி சமுதாயம்:**

**"இவ்வுலகம் பொய்வாழ்வாம்; அவ்வுலகம் மெய்வாழ்வென்**

**றொவ்வலிலா மெய்ஞ்ஞானம் ஓதியென்? - இவ்வுலகைக்**

**கைப்பற்றி வாழ்வைக் கலைக்கும்போர் விஞ்ஞானம்**

**எப்பெற்றி ஆயினும் என்?"**

- (தி. கா. 5;14;83)

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தமைதிப் பேறுபெறும்**

**மெய்யை எடுத்துரைக்கும் மெய்ஞ்ஞானம் - வெய்யபகைப்**

**போரின்றி வாழ்வமைதிப் பூவுலக விஞ்ஞானம்**

**சீரொன்றிக் கொள்வர் தினம்."**

- (தி. கா. 5;14;84)

எனவரும் செய்யுள்கள் வழி, இவ்வுலக வாழ்வு பொய்யானது, அவ்வுலக வாழ்வு மெய்யானது என்ற பொருந்தாத மெய்ஞானம், வாழ்வைக் கலைக்கும் போர் பற்றிய விஞ்ஞானம் கற்றுப் பயனில்லை. வையத்துள் வாழ்வாங்கு அமைதியாக வாழும் பேறுபெறும் மெய்யைப் பற்றிய ஞானம், பகைப் போரின்றி அமைதியாய் வாழும் விஞ்ஞானம் ஆகியவையே மேன்மை தரும் என்பது பண்டிதரவர்களின் கருத்தாகும்.

**கலைக்கல்வி பயிலல்:**

பெற்றோரிடத்து ஆரம்பக்கல்வியும் கற்றோரிடத்து மேற்கல்வியும் பெற்றபின் கலைக்கல்வி பயிலவேண்டும். உள்ளத்தில் உறுதிபெற ஒரு கலை கற்றபின், சாதி அடிப்படையில் அமையாது குணம், தொழிலின் அடிப்படையில் ஒரு தொழிலைச் செய்ய வேண்டும் என்பதனை,

**”பெற்றோர்பால் ஆரம்பக் கல்வியைப் பெற்றவர்**

**கற்றோர்பால் மேல்கல்வி கற்குவர்; - மற்றக்**

**கலைக்கல்வி மன்றக் கழகத் தமர்ந்து**

**நிலைக்கப் பயில்குவர் நேர்ந்து."**

- (தி. கா. 5;14;85)

**”உள்ளத் துறுதிபெற ஓர்கலையைக் கற்றபின்**

**தெள்ள ஒருதொழிலைச் செய்குவர்; - உள்ளுதொழில்**

**சாதி அடியன்று: தத்தம் குணம்தொழிலின்**
**ஆதி அடிப்படையி லாம்."**

- (தி. கா. 5;14;86)

என்னும் கவிகளான் அறிவிக்கின்றார் ஆசிரியர்.

**தொகுப்புரை :**

- திருவள்ளுவரைத் தலைவராகக் கொண்டு இயற்றப்பட்ட முதற்காப்பியம் கோயம்புத்தூர் பண்டிதர் அ. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களின் திருவள்ளுவர் காவியமாகும்.
- சுயராஜ்யம், மக்களாட்சி, காந்தியின் அகிம்சை, நேருவின் சமதருமம் ஆகியவற்றில் ஆசிரியருக்கு ஆழமான ஈடுபாடு உண்டு.
- நேருவின் சமதருமத்தில் ஆசிரியருக்கிருந்த அளவிலா ஆர்வத்தினால் சாதி, சமயமற்ற சமதருமச் சமுதாயத்தை இக்காவியத்தில் படைத்துக்காட்டியுள்ளார்.
- அச்சமுதாயத்தில் ஆண், பெண் இருபாலருக்கும் தனித்தனிக் கல்விச்சாலைகள் இருக்க வேண்டும்.
- ஏட்டுக்கல்வி மட்டும் போதுமானதல்ல; பலவிதமான கலைகளையும் மாணவர்கள் உடன் பயில வேண்டும்.
- உழவுத்தொழில், முதல் தொழிற்கல்வி, உடற்பயிற்சி, ஆசனப் பயிற்சி, படைக்கலப் பயிற்சி, நூல் நூற்றல், புள்ளோட்டல் போன்ற பல்வேறு பயிற்சிகளையும் இருபாலரும் மேற்கொண்டு மேன்மையுற வேண்டும்.
- இளமையில் இல்லத்தில் தாயிடம் கதைகள் பல பயிலவேண்டும். காட்டில் வேலை செய்யுங்கால் தந்தையிடம் பயில வேண்டும்.
- ஒவ்வொரு கலையிலும் தேர்ந்த கலையாளர் ஒவ்வோரிடத்து இருப்பர். அவர்கள்பால் சென்று கலைபயில்வர். கைமாறாக உழைத்திடுவர்.
- பெற்றோரிடத்து ஆரம்பக்கல்வியும் கற்றோரிடத்து மேற்கல்வியும் பெற்றபின் கலைக்கல்வி பயிலவேண்டும்.
- உள்ளத்தில் உறுதிபெற ஒரு கலை கற்றபின், சாதி அடிப்படையில் அமையாது குணம், தொழிலின் அடிப்படையில் ஒரு தொழிலைச் செய்ய வேண்டும்.

என்றின்னவை திருவள்ளுவர் காவியத்தில் கல்விச் சிந்தனைகளாக இக்கட்டுரையால் அறியலாகின்றன.

**துணைநின்ற நூல்கள்:**

[1.] நாயுடு. அ.கி., - திருவள்ளுவர் காவியம், ஆர்.என்.பிரஸ், கோயம்புத்தூர். 1958.

[2.] சாமிநாதய்யர். உ.வே.சா. (உ.ஆ.) – புறநானூறு மூலமும் உரையும், தியாகராச விலாச வெளியீடு, சென்னை. 1956.

| Copyright © Author(s)

**Article DOI: https://doi.org/10.63300/tm12042026.07**

[3.] சோமசுந்தரனார். பொ.வே. (உ.ஆ.) – சிலப்பதிகாரம் மூலமும் உரையும், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. 1979.

[4.] திரிகூடசுந்தரம் – பாபுஜி காட்டும் பாதை, திருபாபுஜி பதிப்பகம், சென்னை1966

[5.] மோஉறன்ராவ். ஸ்ரீ.யு.எஸ்., (தொ.ஆ.) - மகாத்மா கா பப்ளிகேஷன் டிவிஷன், தகவல் ஒலிபரப்பு அமைச்சகம், இந்திய சர்க்கார். 1970.

*I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work

Tamilmanam